# மண்முனை வடக்கு மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுகளில் மண் அகழ்தலும் கரையோர சூழல் பாதிப்புக்களும்

அருட்செல்வம் எஸ், இராஜேந்திரம் கே

மண், தாவரம், நீர் முதலான பௌதிகக் கூறுகள் மனித வாழ்வுக்கான அடிப்படை வளங்களாகும். அதிகரித்துவரும் குடித்தொகையுடன் இணைந்து நகர அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி போன்ற நடவடிக்கைகளினால் மண் அகழ்தல் பெருமளவு இடம்பெற்று வருகின்றது. அந்த வகையில் கரையோரங்கள் அரிக்கப்படுதல், தாவரப் போர்வை நீக்கப்படுதல், உவர் நீர் உட்புகுதல், தரைக்கீழ் நீர் உவராதல், வெள்ளப்பெருக்கு, கடல்மட்ட எழுச்சியினால் ஏற்படும் பாதிப்புக்கள் முதலான சவால்களை கரையோரப் பகுதிகள் எதிர்நோக்க வேண்டி உள்ளது. இவ் ஆய்வு இரு முக்கிய நோக்கங்களைக் கொண்டுள்ளது. (01) மண் அகழ்வு இடம்பெறும் பகுதிகளை அடையாளப்படுத்தல், (02) மண் அகழ்வினால் ஏற்படும் சூழல் பாதிப்புக்களை இனம் காணுதல் என்பனவாகும்.

இவ் ஆய்விற்கு முதலாம், இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. வெளிக்கள ஆய்வு மூலம் மண் அகழப்பட்ட பகுதிகள் அடையாளப்படுத்தப்பட்டு அங்கு அகழப்பட்ட மண்ணின் அளவு மதிப்பிடப்பட்டுள்ளது. இம்மதிப்பீட்டிற்கு அடிப்படையாக செய்மதி விம்பங்களில் இருந்து பெறப்பட்ட தொலையுணர்வுத் தரவுகள், NECCDEP, சுற்றாடல் அதிகாரசபை ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட இரண்டாம் நிலைத் தரவுகள் ஆகியன பயன்படுத்தப்பட்டுள்ளன. மண் அகழ்தல் கூடுதலாக இடம்பெறும் பகுதிகளாக மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் கல்லடி உப்போடை, திராய்மடு, பாலமீன்மடு முதலான கிராமங்களும், மண்முனைப் பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவில் ஆரையம்பதி, புதுக்குடியிருப்பு போன்ற கிராமங்களும் அடையாளப் படுத்தப்பட்டுள்ளன. ஆய்வுப் பிரதேசத்தில் ஏறக்குறைய 13951$m^3$ இலும் அதிகமாக இதுவரை மண் அகழப்பட்டுள்ளது. ஆய்வின்படி மண்முனை வடக்குப் பிரதேச செயலகப் பிரிவில் மொத்தமாக 7125$m^3$ மண்ணும், மண்முனைப்பற்றுப் பிரிவில் 6826$m^3$ மண்ணும் அகழப்பட்டுள்ளது.

ஆய்வுப் பிரதேசத்தில் மண்ணகழ்தல் செயற்பாடு கடற்கரையை சார்ந்து (75-150 மீற்றருக்குள்) இடம்பெறுவதனால் மண் அகழப்பட்ட இடங்களில் உவர் நீரின் ஊடுருவல் காரணமாக தரைக்கீழ் நீரின் தரம் குன்றியுள்ளது. மண் அகழப்பட்ட கிடங்குகளில் நீரின் மின் கடத்துதிறன் (Electrical conductivity)1550-3300µs/cm வரை வேறுபட்டுக் காணப்படுகின்றது. உதாரணம்- கல்லடி உப்போடை இல் EC பெறுமானம் 3300µs/cm ஆகவுள்ளது. இப்பிரச்சினைகளிலிருந்து விடுபட பொருத்தமான சூழல் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றுவது அவசியமான தொன்றாகக் காணப்படுகின்றது.

**திறவுச் சொற்கள்:** மண் அகழ்வு, கரையோர சூழல் பாதிப்பு, மின் கடத்துதிறன்

[1,2]. *Department of Geography, Eastern University, Sri Lanka. E-mail: rajan_srilanka@yahoo.com*